# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2446 - 2025 ජූලි 18 වැනි සිකුරාදා - 2025.07.18

2446 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 667 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 666 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 674 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
**அரசாங்க அழுத்தகர் (பதில்).**

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 08,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


665 - B 82701 - 403 (2025/07)

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2025 இன் இல.462

## இலங்கை நிரந்தர கடற் பிரிவு
## அதிகாரிகளின் தரத்தை உயர்வுபடுத்துதல்

2025, மாச்சு மாதம் 11 ஆந் திகதியிலிருந்து வேலை பார்க்கும் லெப்டினன்ட் தரத்திற்கு :

உப லெப்டினன்ட் ரத்நாயக முதியன்சேலாகே நவிது திவங்க ரத்நாயக, என்ஆர்எக்ஸ் 4550, இகப;
உப லெப்டினன்ட் மஹ கமகே கயான் தேமின்த, என்ஆர்எக்ஸ் 4551, இகப;
உப லெப்டினன்ட் பமுனுசிங்ஹ வித்தாரனகே பிரமோத் பியுமன்த, என்ஆர்எக்ஸ் 4553, இகப;
உப லெப்டினன்ட் தஸநாயக முதியன்சேலாகே பசிது செஷான் தஸநாயக, என்ஆர்எக்ஸ் 4554, இகப;
உப லெப்டினன்ட் சமரப்புலிகே சமிது ஹர்ஷன விதுரங்க பெர்னாந்து,என்ஆர்எக்ஸ் 4555, இகப;
உப லெப்டினன்ட் வகபேடி கெதர ஜாலிய கங்கனாத், என்ஆர்எக்ஸ் 4556, இகப;
உப லெப்டினன்ட் ஹெட்டிஆரச்சிகே நதுன் அசின்த ஹெட்டிஆரச்சி, என்ஆர்எக்ஸ் 4557, இகப;
உப லெப்டினன்ட் வீரகோன் முதியன்சேலாகே பசிது டில்மின, என்ஆர்எக்ஸ் 4558, இகப;
உப லெப்டினன்ட் கிரல தெனியகே திலீப பிரசாத், என்ஆர்எக்ஸ் 4559, இகப;
உப லெப்டினன்ட் ரஜவாஸல அதபத்து முதியன்சேலாகே பிரமோத் மிஹிரங்க மொலகொட, என்ஆர்எக்ஸ் 4560, இகப;
உப லெப்டினன்ட் பங்கமுவகே கநேஷ் கோகில, என்ஆர்எக்ஸ் 4561, இகப;
உப லெப்டினன்ட் லோகுறுகே திலின நிர்மான ஆரியரத்ன, என்ஆர்எக்ஸ் 4562, இகப;
உப லெப்டினன்ட் கருசிங்ஹகே பாஷன பியுமால் கருணாரத்ன, என்ஆர்எக்ஸ் 4563, இகப;
உப லெப்டினன்ட் அதுகோரல தொன் சங்தீப மதுமால், என்ஆர்எக்ஸ் 4564, இகப.

2025, மாச்சு மாதம் 11 ஆந் திகதியிலிருந்து வேலை பார்க்கும் லெப்டினன்ட் (ச) தரத்திற்கு :

உப லெப்டினன்ட் (ச) பினிது அநுபிய சமரசிங்ஹ, என்ஆர்எஸ் 4588, இகப;
உப லெப்டினன்ட் (ச) ஹேவாகட்டாடிகே மநுஜ கவீன் அங்ஜன, என்ஆர்எஸ் 4589, இகப;
உப லெப்டினன்ட் (ச) கஹனாவிட லியனகே தென் சரனி டான்யா, என்ஆர்எஸ் 4590, இகப;
உப லெப்டினன்ட் (ச) வெலிகம கமகே சத்ஸரனி தாறுகா, என்ஆர்எஸ் 4591, இகப.

2025, மாச்சு மாதம் 11 ஆந் திகதியிலிருந்து வேலை பார்க்கும் லெப்டினன்ட் (விபா) தரத்திற்கு:

உப லெப்டினன்ட் (விபா) சுபசிங்ஹ முதியன்சேலாகே கோரலே கெதர ரவிது பண்டார ஜயரத்ன, என்ஆர்ஆர் 4594, இகப;
உப லெப்டினன்ட் (விபா) திக்வெல்ல விதானகே நவோத் தேசித, என்ஆர்ஆர் 4595, இகப.

பிஏகேஎஸ்பீ பானகொட,
ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, என்டிசீ, பீஎஸ்சீ,
வைஸ் அத்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு,
2025, யூன் மாதம் 26.

07-750

---

2025 இன் இல.463

## இலங்கை நிரந்தர கடற் பிரிவு
## அதிகாரிகளின் தரத்தை உயர்வுபடுத்துதல்

2024, மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் தரத்திற்கு:

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் நிமேஷ் டிலுக்ஷன உடுகமகோரால, என்ஆர்எம் 4162, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் தெவின் வின்துல எதிரிசிங்ஹ, என்ஆர்எம் 4163, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் வடுதந்திரி செநெத் ரஸ்மிக, என்ஆர்எம் 4164, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் தஸித் புவநெக ஜயதிலக, என்ஆர்எம் 4165, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் கங்காணம் கமகே தக்ஷின பாரத சங்க, என்ஆர்எம் 4169, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் மொஹியதீன் பவாஹிர் இன்ஜாஸ் நஜீத், என்ஆர்எம் 4171, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் ரணதீரகே ஜயான் சதுரங்க, என்ஆர்எம் 4172, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் உடுமலகல கமகே நவோத் சங்ஜன, என்ஆர்எம் 4173, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் தலுவத்தகே தொன் தேஷான் லக்ஷித சபரமாது, என்ஆர்எம் 4177, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் ரணதுங்க ஆரச்சிகே பசிது ரங்கன பெரேரா, என்ஆர்எம் 4179, இகப;

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் மேதகெதர நிபுன இசுரங்க விஜேபண்டார, என்ஆர்எம் 4181, இகப.

2024, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து உப லெப்டினன்ட் தரத்திற்கு:

வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் லகித் கவிஷ த அல்விஸ் சமரசிங்ஹ, என்ஆர்எம் 4168, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் சன்துஸ ஸ்வர்ன மீமேடும, என்ஆர்எம் 4175, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் வீரசூரிய கங்காணமலாகே துலன்ஜன் சாமர வீரசூரிய, என்ஆர்எம் 4176, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் மொஹொமட் சஹீல் அஹமட் மின்ஹாஜ், என்ஆர்எம் 4178, இகப;
வேலை பார்க்கும் உப லெப்டினன்ட் பெதும் விமுக்தி விஜேசேகர, என்ஆர்எம் 4182, இகப.

பிஏகேஎஸ்பீ பானகொட,
ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ, என்டிசீ, பீஎஸ்சீ,
வைஸ் அத்மிரால்,
கடற்படை தளபதி.

கொழும்பு,
2025, யூலை மாதம் 04.

07-745

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## பொல்தும்பே சமன் தேவாலயத்தின் எஸல பெரஹர - 2025

1. இவ்வாலயத்தின் 2025 ஆம் வருடத்தின் பெரஹர உற்சவத்திற்காக முகூர்த்தக்கால் ஊன்றும் வைபவம் 2025.06.26 ஆந் திகதி கூடிய சுப வேளையில் நிகழ்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது.
   - 2025.07.30 ஆந் திகதி முதல் 2025.08.08 ஆந் திகதி வரை பெரஹர ஊர்வலத்தின் உள்வீதி வலம் ஆரம்பமாகும்.
   - 2025.08.09 ஆந் திகதி முதல் 2025.08.13 ஆந் திகதி வரை மஹா பெரஹர வெளிவீதி வலம் நடைபெறும்.
   - 2025.08.14 ஆந் திகதி வலஹீன் எல்ல முகலான நீர் ஊற்றில் நீர் வெட்டு வைபவத்தின் பின்னர் பெரஹர ஊர்வலம் ஆலயத்திற்குள் பிரவேசிப்பதோடு எஸல பெரஹர உற்சவம் நிறைவுறும்.

பெரஹர நடைபெறும் பிரதேசம்

2. ஆலயத்திற்கு வடக்கே வீதி எம். கே. லூயிஸ் சிங்ஹோ, எம். கே. பொடி மஹத்மயா, ஆகியோரின் காணியும், கிழக்கே சிறிமல், எம். கே. விஜதாஸ ஆகியோரின் காணியும், தெற்கே ரண்பண்டாரவின் காணியும், கல்படியவத்த எனும் இடமும், மேற்கே பி. எம். விஜேஹாமி மற்றும் நோபட் சிந்தாமணி ஆகியோரின் காணியுமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதியை பக்தர்கள் ஒன்று கூடி வைபவத்தினைக் கண்டுகளிப்பதற்காக ஒழுங்கமைத்துள்ளேன்.

உணவு மற்றும் நீர்

3. விகாரை வளாகம், போதி வளாகம் மற்றும் ஆலய வளாகமாக கருதப்படும் இடங்களில் உணவு சமைத்தலை தடை செய்கின்றேன்.

வியாபாரம்

4. மேல் வளாகம், சைத்திய வளாகம், விகார வளாகம் ஆகிய அனைத்து வளாகங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கின்றேன்.

5. கீழ் வீதியில் தெற்கே பிரதான படிக்கட்டுக்களிலிருந்து சிம்மாசன மண்டபம் வரையும் கல்படிக்கட்டு கிழக்கே நாட்டிய அறை வரையும் கீழ் வீதியில் ஆலய பக்கத்திற்கு ரத வளாக மதலிலிருந்து சைத்திய பிரிவு வரையும் என்னால் நியமிக்கப்பட்ட வளாகம் வரையும் மீண்டும் ரத இல்ல வளாகத்திற்கு கிழக்கிலிருந்து மற்றும் தெற்கே கீழ்ப்பிரிவிலும் ரத இல்ல முன்பக்கத்தில் ஆலயத்தின் கிழக்கு எல்லைக்கு அருகில் வியாபாரம் செய்வதற்காக பெரஹர ஊர்வலம் செல்வதற்கு தடை ஏதும் இல்லாத வண்ணம் அனுமதி அளிக்கிறேன்.

6. பிரதேசசெயலாளரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதி இல்லாமல் எந்தவொரு நபராலும் முகாம் வளாகத்திற்குள் டிக்கட், கொடி விற்றல் அல்லது வேறு விதமான எந்த கருமத்திற்காகவும் அல்லது பணம் திரட்டல் செய்யக்கூடாததுடன் புகையிலை மற்றும் மது போதைப்பொருட்கள் உபயோகித்தல் முற்றாக தடை செய்கிறேன்.

வாகனம்

7. பிரதான வீதியில் தனியார் வாகனங்களை நிறுத்துதலை தடை செய்கின்றேன். சைக்கிள் மற்றும் வண்டி உட்பட அனைத்து வாகனங்களையும் வீதியில் அல்லது முகாம் பொறுப்பதிகாரியின் அனுமதிப் பத்திரம் இன்றி முகாம் வளாகத்திற்குள் உட்செல்லல் தன்டையாகும்.

சுகாதாரம்

8. என்னால் முகாம் வளாகத்திற்குள் வியாபாரம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டினை குத்தகைக்கு விடும் விதம் குறித்து அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்படும்.

9. குத்தகைக்கு எடுக்கப்படும் வணிக பூமியில் அமைக்கப்படும் தற்காலிக கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு உட்பட வேண்டும். இடத்தினை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகளினால் எஸல உற்சவத்தின் பின்னர் முகாம் வளாகத்திற்குள் பொலிதீன் உட்பட அனைத்து குப்பைகளையும் சேர்த்து பொதுசன சுகாதார பரீட்சகர்களின் ஆலோசனைக்கு ஏற்ப அகற்ற வேண்டும்.

கடைத்தொகுதி அமைத்தல்

10. என்னிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதி இல்லாமல் முகாம் வளாகத்திற்குள் எவ்வித கட்டிடமும் அமைத்தல் தடையாகும். அவ்வாறு அமைக்கப்படும் நிர்மாணப்பணிகள் சுகாதாரப்பிரிவின் சிபாரிசுகளுக்கு ஏற்ப பொலிஸாரால் அகற்றப்படும்.

யாசகர்கள்

11. யாசகம் பெறல் அல்லது புண்ணியத்திற்கு கையேந்துவதற்காக பூஜை பூமிக்குள் அல்லது முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் பணத்தால் அல்லது வேறு முறையால் எவ்வித நபரினாலும் புண்ணியத்திற்காக வழங்கல் அல்லது தானம் செய்தல் அனுமதி அளிக்கப்படமாட்டாது.

சிங்கள மற்றும் தமிழ் ஊடக மொழிபெயர்ப்புகளின் இடையில் ஏதேனும் முரண்பாடு இருந்தால், சிங்கள மொழிபெயர்ப்பு நடைமுறையை கையாளவும்.

டீ. பீ. ஜீ. ரேணுகா,
பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

07-751

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)**

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2025.07.18 தொடக்கம் 2025.08.01 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2025.08.08 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்ஹ,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/13/2025/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட தெல்கந்த காணிப்பதிவக எம்பிரிவின் 733 காணிப்பதிவுப்புத்தகத்தின் 206 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாண கொழும்பு மாவட்ட பல்லேபத்து - சல்பிட்டி கோரளை நுகேகொட இல் அமைந்துள்ள "தெல்கஹவத்த" என்ற பெயருடைய காணியின் 1962.12.05 ஆந் திகதிய 2527A ஆம் இலக்க வரைபடத்தின் படி பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 1 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வடக்கு : லொட் 02,<br>கிழக்கு : இக்காணியின் ஒரு பகுதி,<br>தெற்கு : எம். எப். குணசேகரவின் காணி,<br>மேற்கு : வீதி,<br><br>விஸ்தீரணம் ; 00ஏ. 00றூ. 15பே | 1. பிரசித்த நொத்தாரிசு எம். எம். எம். ஏ. ரஹீம் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1963.02.05 ஆந் திகதிய 3509 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. பிரசித்த நொத்தாரிசு யு. பொன்னம்பெரும என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1983.10.11 ஆந் திகதிய 63 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>3. பிரசித்த நொத்தாரிசு யு. பொன்னம்பெரும என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1986.02.20 ஆந் திகதிய 185 ஆம் இலக்க அடமான உறுதி. |

07-694

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2025.07.18 தொடக்கம் 2025.08.01 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2025.08.08 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்ஹ,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/39/2025/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட தெல்கந்த காணிப்பதிவக எம்பிரிவின் 2236 காணிப்பதிவுப்புத்தகத்தின் 286 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாண கொழும்பு மாவட்ட பல்லேபத்து - சல்பிட்டி கோரளை கரகம்பிட்டிய- யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள ம. இ. 18/3, "கோன்கஹவத்த லிந்த கலே" என்ற பெயருடைய காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டி. ஜி. வீரசிங்ஹ அவர்களால் 1996.01.02 ஆந் திகதிய 953 ஆம் இலக்க வரைபடத்தின் படி பிரித்து வேறாக்கப்பட்ட லொட் 2 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வடக்கு : ஜயந்த த சில்வாவுக்கு உரித்தான காணி,<br>கிழக்கு : லொட் 3,<br>தெற்கு : வீதி,<br>மேற்கு : லொட் 1,<br><br>விஸ்தீரணம் ; 00ஏ. 00றூ. 6.52பே | 1. பிரசித்த நொத்தாரிசு பி. பி. ரணசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.09.26 ஆந் திகதிய 5828 ஆம் இலக்க அறுதி உறுதி.<br><br>2. பிரசித்த நொத்தாரிசு பி. பி. ரணசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.09.26 ஆந் திகதிய 5829 ஆம் இலக்க அடமான உறுதி. |

07-695

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்
## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2025.07.18 தொடக்கம் 2025.08.01 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு தெல்கந்த காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2025.08.08 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

டப்ளியூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்ஹ,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/ என்பீ/11/2/45/2025/ ஏடு. தயா,
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ ஏ3,டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் I<br>பதிவு புத்தகங்களில் சிதைவடைந்த இருமடித்தாள்கள் பற்றிய விபரம் | நிரல் II<br>காணி பற்றிய விபரம் | நிரல் III<br>பதிவு செய்யப்பட்ட காணி உறுதி பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்ட தெல்கந்த காணிப்பதிவக தெஹி பிரிவின் 60 ஆம் காணிப்பதிவுப்புத்தகத்தின் 33, 34 ஆம் இருமடித்தாள் | மேல் மாகாண கொழும்பு மாவட்ட கொழும்பு பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவின் தெஹிவளை - கல்கிசை நகர சபை எல்லையில் தெஹிவளை கம்பல் பிரதேசத்தில் அமைந்துள்ள "அலுத்வத்த" என்ற பெயருடைய காணியின் நில அளவையாளர் நாயகத்தின் பீ. பீ. கொ 4786 ஆம் இலக்க 1977.08.10 ஆந் திகதிய நிலவரைபடத்தின் லொட் 642 என காண்பிக்கப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள்,<br><br>வடக்கு : 4 ஏ மற்றும் 4பி ம. இ. 41 அல்பர்ட் பிரதேசம் மற்றும் 5 ம.இ. 37 அல்பர்ட் பிரதேசம்,<br>கிழக்கு : 643,<br>தெற்கு : கெம்பல் பிரதேசம்,<br>மேற்கு : 641,<br><br>விஸ்தீரணம் ; 00ஏ. 00றூ. 19பே | 1. தேசிய வீடமைப்பு ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1993.07.17 ஆந் திகதிய 8598 ஆம் இலக்க அறுதி உறுதி. |

07-696

---

**தபால் மற்றும் தந்திகள் நலன்புரிசங்கம்**

தபால் தந்திகள் நலன்புரிசங்கத்தின் நலன்புரி சங்ககட்டளைச்சட்டத்தின் 11 ஆம்பிரிவின் கீழ் தபால் தந்திகள் நலன்புரி சங்கத்தால் தயாரிக்கப்பட்ட மற்றும் அந்தப்பிரிவின் மூலம் வெகுசன ஊடக அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அவரினால் ஆமோதிக்கப்பட்ட விதிகள்.

செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

கொழும்பு,
2025, யூன் 28.

**விதிமுறைகள்**

1949 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஏற்கனவே திருத்தியமைக்கப்பட்ட தபால் தந்திகள் நலன்புரி சங்கத்தின் விதிமுறைகள் கீழ்காட்டப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தியமைக்கப்படுகிறது.

(1) I ஆம் அத்தியாயம் - சாதாரண விதிமுறைகள்

7 ஆம் விதி முறை (1) அ - 35 வயது என்பதை 45 வயதாக மாற்றவும்
7 ஆம் விதி முறை (1) இ - 7 ஆம் விதி (I) ஆ விதி முறைக்கு பிறகு கீழ்வரும் விதிமுறையை உள்ளடக்கவும்

40 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் அவர் சங்கத்தில் அங்கத்துவம் பெற விரும்பின் அவர் மூலம் 40 வயதிலிருந்தே அங்கத்தவர் மற்றும் அங்கத்தவரில் தங்கி வாழ்வோருக்கான மரணாதார சங்க கொடுப்பனவு திட்டத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்துதல் அவசியம்.

9 ஆம் விதிமுறை (1) - ரூபா 100/= என்பதை நீக்கி ரூபா 300/= என்பதை பிரதியீடு செய்க.

10 ஆம் விதிமுறை (vi) - கீழ்காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்க.

உரியவாறு அங்கத்துவ பணம் செலுத்தியுள்ள பழைய அங்கத்தவரொருவருக்கு வருடத்திற்கொரு முறை ஐயாயிரம் ரூபாவை உற்சவ கொடுப்பனவாக பெற்றுக்கொள்ள முடியும் .அதனை சமமான 10தவணைகளில் மீள செலுத்துவதுடன் தவணைப்பணத்தின் 10% சேவைக் கட்டணமாக அறவிடப்படும். இந்தப்பணத்தை மீள செலுத்தாது விடில் 10 ஆம் விதி (iv) விதியின் கீழ் கிடைக்கும் அழிப்புகளில் இருந்து அறவிடப்படும். அப்படிப்பட்ட அங்கத்துவருக்கு அவர் அங்கத்துவம் வகிக்கும் காலத்துள் மீண்டும் எந்தவொரு உற்சவகொடுப்பனவும் பெற்றுக்கொடுக்கப்படமாட்டாது.

11 ஆம் விதிமுறை (ஆ) - கீழ்காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்க.
அங்கத்தவரொருவர் மரணிப்பாரெனின் கூட்டுத்தாபன கொடையில் ரூபா 30000/= மரணாதார கொடுப்பனவாக செலுத்தவேண்டும். மரணித்தவர் கூட்டுத்தாபனத்திற்கு ஏதும் செலுத்த வேண்டியிருப்பின் அதனை அறவிட்ட பின் மிகுதிப்பணத்தை செலுத்துதல் வேண்டும்.அங்கத்தவர் மற்றும் அங்கத்தவரில் தங்கிவாழ்வோர் மரணாதார கொடுப்பனவாக ரூபா 50 அறவிடப்படும். அதில் அங்கத்தவரின் மரணத்திற்கு ரூபா 20 அங்கத்தவரில் தங்கிவாழ்வோரின் மரணத்திற்கு ரூபா 30 வரவு வைக்கப்படல்வேண்டும்.

19ஆம் விதி (2) - ரூபா 9,000,000/= என்பதை நீக்கி ரூபா 30,000,000/= என பிரதியீடு செய்க.

19 ஆம் விதி (3) (i) - (அ) (ஆ) (இ) பகுதிகளை நீக்கி கீழ்வரும் பகுதிகளை பிரதியீடு செய்க.

(அ) ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் ஐந்து 3 வருட காலமாக கூட்டுத்தாபனத்தில் அங்கத்துவம் வகித்துள்ள ஒருவருக்கு ரூபா 25000/= செலுத்த வேண்டும்.

(ஆ) ஐந்து வருடங்களுக்கு மேல் மற்றும் பத்து வருடம் வரை அங்கத்துவம் வகித்துள்ள ஒருவருக்கு ரூபா 50000 செலுத்த வேண்டும்.

(இ) பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அங்கத்துவம் வகித்துள்ள ஒருவருக்கு ரூபா 75000/= செலுத்த வேண்டும்.

(2) III வது அத்தியாயம் - ஓய்வூதிய கொடுப்பனவு முறை

2 ஆம் விதிமுறை - கீழ்காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்க.

கூட்டுத்தாபனத்தின் சபை அங்கத்தவர்களும் ஓய்வூதிய கொடுப்பனவு திட்ட முறைக்கு மாதாந்தம் ரூபா 200 ஐ செலுத்த வேண்டும். தான் விரும்பின் அதற்கு மேற்பட்ட தொகையை செலுத்த முடியுமென்பதுடன் அத்தொகை ரூபா 100 பெறுமதியினால் அதிகரிக்கப்பட வேண்டும் .

(3) IV வது அத்தியாயம் - பணிநிறைவுகொடை

2 ஆம் விதிமுறை- கீழ்காட்டப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்க.

ஓய்வு பெறும், விலகிச்செல்லும் சேவையில் இருந்து வெளியேற்றப்படும் சகல அங்கத்தவர்களுக்கு அவர்கள் சங்கத்தில் அங்கத்துவம் வகித்த வருடங்களிற்கேற்ப பின் வரும் ஓய்வூதிய பணிநிறைவுகொடை கிடைக்கப்பெறல் வேண்டும்.

i. அங்கத்துவ காலம் 10 வருடம் வரை ரூபா 100 வீதப்படி
ii. அங்கத்துவ காலம் 15 வருடம் வரை ரூபா 200 வீதப்படி
iii. அங்கத்துவ காலம் 20 வருடம் வரை ரூபா 300 வீதப்படி
iv. அங்கத்துவ காலம் 10 வருடத்திற்கு மேல் ரூபா 400 வீதப்படி.

(4) V வது அத்தியாயம் - திருமண கடன்

1 ஆம் விதிமுறை - 1 வது பந்தியில் ரூபா 100000/= என்பதை நீக்கி ரூபா 150000/= என பிரதியீடு செய்க.
2 வது பந்தியில் ரூபா 2750/= என்பதை நீக்கி ரூபா 3750/= என பிரதியீடு செய்க.
ரூபா 250/= என்பதை நீக்கி ரூபா 375/= என பிரதியீடு செய்க.
3 வது பந்தியில் ரூபா 125/= என்பதை நீக்கி ரூபா 187.50/= என பிரதியீடு செய்க.

2 ஆம் விதிமுறை - கீழ் வருமாறு திருத்தம் செய்க.
கடன் கேட்கும் அங்கத்தவர் 6 மாத கால அங்கத்துவத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(5) VI வது அத்தியாயம் - அங்கத்தவரில் தங்கிவாழ்வோருக்கான மரணாதார கொடுப்பனவு திட்டம்

iv ஆம் விதிமுறை - அ. ரூபா 10000/= என்பதை நீக்கி ரூபா 20000/= என பிரதியீடு செய்க.
ஆ. ரூபா 5000/= என்பதை நீக்கி ரூபா 10000/= என பிரதியீடு செய்க.
இ. கீழ் வருமாறு திருத்தம் செய்க.
அங்கத்தவரின் தாய், தந்தை, மாமியார், மாமனார் ஆகியோரில் இருவருக்கு மாத்திரம் ரூபா 5000/= என திருத்தம் செய்க.

(6) VII வது அத்தியாயம் - விசேட பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கடன்.

1 ஆம் விதிமுறை - ரூபா 2,00,000/= என்பதை நீக்கி ரூபா 3,00,000/=என பிரதியீடு செய்க .
3 ஆம் விதிமுறை - ரூபா 2,00,000/= என்பதை நீக்கி ரூபா 3,00,000/=என பிரதியீடு செய்க.
4 ஆம் விதிமுறை - (ஈ)
மூன்று வருடங்கள் என்பதை மாற்றி, விண்ணப்பதாரி குறைந்தபட்சம் இரண்டு வருடகாலங்கள் பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என பிரதியீடு செய்க.
5 ஆம்விதிமுறை - ரூபா 8,000,000/= என்பதை நீக்கி ரூபா 60,000,000/=என பிரதியீடு செய்க.

(7) VIII வது அத்தியாயம் - பண்டிகை கடன்

1 ஆம் விதிமுறை - ரூபா 60000/= என்பதை நீக்கி ரூபா 75000/= என பிரதியீடு செய்க.
4 ஆம் விதிமுறை - "இரண்டு வருடங்களுக்குறையாததை "என்பதை நீக்கி "ஒரு வருடத்திற்கு குறையாத அங்கத்துவத்தை" என பிரதியீடுசெய்க.

(8) XI வது அத்தியாயம் - நலன்புரி நிதியம்

1 ஆம் விதிமுறை (ஈ) - ரூபா 10/= என்பதை நீக்கி ரூபா 20/= என பிரதியீடு செய்க.

2 ஆம் விதிமுறை - 5 வருட புலமைப் பரிசில் திட்டம்
2 ஆம் விதிமுறை (அ) - இருபது மாணவர்கள் என்பதை மாற்றி முப்பது மாணவர்கள் என பிரதியீடு செய்க.

3 ஆம் விதிமுறை - க. பொ .த. (உயர்தரம்) புலமைப் பரிசில் திட்டம்
3 ஆம் விதிமுறை (அ) - 10 பேருக்கு 10 புலமைப் பரிசில் என்பதை மாற்றி 15 பேருக்கு 15 புலமைப் பரிசில் என பிரதியீடு செய்க.

வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ (பா.உ.)
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்

2025, யூன் மாதம் 28 ஆந் திகதி

07-719

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2023, திசெம்பர் 15 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது ;

"2000.04.06 ஆந் திகதிய MPS/NE/DS/1/5/1035 என்னும் சான்றிதழ் இலக்கத்தின் கீழ் (மத்திய மாகாணத்தின் மாகாண கம்பெனிகள் பதிவாளர் அலுவலகத்தில்) வியாபாரப் பெயர்கள் பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட்டதும் நுவரெலியாவில் அதன் பிரதான தொழிலிடத்தைக் கொண்டதுமான "சேனாரத்ன ஹாட்வெயார்" என்னும் பெயர் மகுடத்தின் கீழ் தனியுரிமையாண்மையில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துகின்ற நுவரெலியாவைச் சேர்ந்த சபரமாது மிரிஞானகே டொன் கபில பண்டார சேனாரத்ன (கடன்பெறுநர் I) மற்றும் நுவரெலியாவைச் சேர்ந்த கனகரத்ன முதியன்சேலாகே பத்மா எரந்தி மங்கலிகா (கடன்பெறுநர் II) ஆகியோர் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ (வங்கி) சார்பில் நிறைவேற்றப்பட்ட பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு திரு. பி. எம். பி. ருவன் குமார பஸ்நாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.09.28 ஆந் திகதி 3219 ஆம் இலக்க ஈட்டு முறி, நுவரெலியா பிரசித்த நொத்தாரிசு திரு. சேகர் சனுஷ்கர் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.05.31 ஆந் திகதிய 32 ஆம் மற்றும் 34 ஆம் இலக்க ஈட்டு முறிகள், 2019.06.06 ஆந் திகதிய 37 ஆம் இலக்க ஈட்டு முறி ஆகியவற்றின் மூலம் ஈடுவைத்து அடமானம் வைக்கப்பட்ட இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகளின் பிணைப்பொறுப்புக்கு எதிராக வழங்கப்பட்ட கடன்கள்/ வசதிகளின் மீதான கொடுப்பனவில் தவணைதவறியுள்ளதாதலாலும்.

அத்துடன் I ஆம் கடன்பெறுநர் இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளின் இறையிலி சொந்தக்காரராக அவரின் இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறை என்பவற்றை சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளதாதலாலும்.

அத்துடன் 2023, நவெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் மீது நூற்று பதினொரு மில்லியன் ஏழு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூற்று எழுபத்து ஐந்து ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூபா 111,787,575.91) தொகை வங்கிக்கு வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும்.

(இதனகத்துப் பின்னர் கூட்டாக முதன்மைச் சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயலாற்றுகின்ற அப்பணிப்பாளர் சபை சொல்லப்பட்ட நூற்று பதினொரு மில்லியன் ஏழு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூற்று எழுபத்து ஐந்து ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூபா 111,787,575.91) தொகையை அல்லது விற்பனை இடம்பெறுகின்ற நேரத்தில் செலுத்தப்படாது எஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தை மற்றும் 2023, திசெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத்தேதி வரையில் கூட்டுமொத்தமாக ஐம்பத்து ஐந்து மில்லியன் ஐந்து இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எண்ணூற்று பதினான்கு ரூபா எழுபத்து மூன்று சதம் (ரூபா 55,568,814.73) இனைக் கொண்ட பின்வரும் தொகைகளின் மீதான வட்டியை முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி உறப்பட்ட விளம்பரப்படுத்தல் விற்பனை கிரயங்கள் மற்றும் வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனும் இருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக சொல்லப்பட்ட ஈட்டு முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகள் உரிமம்பெற்ற ஏல விற்பனையாளராகிய என். யூ. ஜயசூரிய என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீரமானிக்கின்றது."

(i) ஆண்டுக்கு பதினெட்டு தசம் ஏழு ஐந்து (18.75%) என்ற சதவீதத்திலான வட்டியுடன் சொல்லப்பட்ட 34 ஆம் இலக்க முறியினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 34 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஐந்து மில்லியன் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஏழு ரூபா இருபத்து இரண்டு சதம் (ரூபா 5,999,357.22).

(ii) ஆண்டுக்கு பதினெட்டு தசம் ஏழு ஐந்து (18.75%) என்ற சதவீதத்திலான வட்டியுடன் சொல்லப்பட்ட 3219 ஆம் மற்றும் 32 ஆம் இலக்க முறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 3219 ஆம் மற்றும் 32 ஆம் இலக்க முறிகளின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான முப்பத்து ஐந்து மில்லியன் ரூபா (ரூபா 35,000,000.00).

(iii) ஆண்டுக்கு பதினெட்டு தசம் ஏழு ஐந்து (18.75%) என்ற சதவீதத்திலான வட்டியுடன் சொல்லப்பட்ட 3219 ஆம் மற்றும் 32 ஆம் இலக்க முறிகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 3219 ஆம் மற்றும் 32 ஆம் இலக்க முறிகளின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஒன்பது மில்லியன் ரூபா (ரூபா 9,000,000.00).

(iv) ஆண்டுக்கு முப்பத்து இரண்டு (32.00%) என்ற சதவீதத்திலான வட்டியுடன் சொல்லப்பட்ட 37 ஆம் இலக்க முறியினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 37 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான ஐந்து மில்லியன் ஐந்து இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நானூற்று ஐம்பத்து ஏழு ரூபா ஐம்பத்து ஒரு சதம் (ரூபா 5,569,457.51).

### மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலகத்தின் ஒய் பலாத கோறளையில் ஹாவா எலிய கிராம அலுவலர் பிரிவில் நுவரெலியா மாநகர சபை எல்லைகளினுள் ஹாவா எலியவில் அமைந்துள்ளதும் "நுவரெலியா மத்தி" என அழைக்கப்படும் காணியின் அக்காணித்துண்டு அடங்கலும்; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள எல்லாவற்றுடன் சேர்த்து இருபது பேர்ச் (00ஏ. 00றூ. 20பே) இனைக் கொண்டுள்ளதுடன் இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: இராணுவ வீதி மற்றும் காட்டு ஒதுக்கம்; கிழக்கு: விஜேரத்னவின் வீட்டுக்குச் செல்கின்ற வீதி மற்றும் காட்டுக்கான வீதி ஒதுக்கம்; தெற்கு: புகையிரதத் திணைக்களத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் காணி; மேற்கு: இராணுவ வீதி மற்றும் காட்டு ஒதுக்கம்; அத்துடன் நுவரெலியா காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் LDO A 20/29 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட காணி அண்மைய நிலஅளவைக்கு இணங்க பின்வருமாறு குறித்துக்காட்டப்படுகின்றது:

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலகத்தின் ஒய் பலாத கோறளை ஹாவா எலிய கிராம அலுவலர் பிரிவில் நுவரெலியா மாநகர சபை எல்லைகளினுள் ஹாவா எலிய, 7 ஆம் வட்டார இலக்கத்தில் அமைந்துள்ளதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998.02.26 ஆந் திகதிய 1389 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும் "அரச காணி" என அழைக்கப்படும் காணியின் அக்காணித்துண்டு அடங்கலும்; பரப்பளவில் இது, அதன் மீதுள்ள எல்லாவற்றுடன் சேர்த்து மேற்கூறப்பட்ட 1389 ஆம் இலக்க வரைபடத்தின் நிலஅளவைக்கும் விவரணத்துக்கும் இணங்க இருபது பேர்ச் (00ஏ. 00றூ. 20பே) இனைக் கொண்டுள்ளதுடன் இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: அதே காணியின் எஞ்சிய பாகம்; கிழக்கு: 10 அடி வீதி; தெற்கு: அதே காணியின் எஞ்சிய பாகம்; மேற்கு: ஹெவ்லொக் டிரைவ் இற்கான தெரு எல்லைக்கோடு.

உபகரணங்களுடன் சேர்த்து மின்சார விநியோகமுறைமை, நீர்விநியோக முறைமை உபகரணங்கள், தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் குளிரூட்டி உபகரணங்கள் என்பவை உட்பட மேலே மேலும் விபரமாக குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுக்கு தற்போது அல்லது இதனகத்துப்பின்னர் காலத்துக்குக்காலம் பொருத்தப்படக்கூடிய அல்லது நிரந்தரமாக இணைக்கப்படக்கூடிய சகல மற்றும் தனியான அசைவற்ற பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி உபகரணங்கள் இணைப்புக்கள் பொருத்திகள் சேவைகள் என்பவற்றை உள்ளடக்கியது.

சபையின் கட்டளைப்படி,
சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

07-704

---

### இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2024.01.08 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது;

1. பிரசித்த நொத்தாரிசு பந்துமதி போதிநாயக்க ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2013.12.06 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 7144, பிரசித்த நொத்தாரிசு நதீஷா தரங்கனி பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2017.06.09 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 3350 ஆகியவற்றின் பேரில் கொழும்பு 11, பீப்பல்ஸ் பார்க், UG/ 52 இல் அமைந்த M/S Chemamadu Book Centre இடமிருந்து நிரந்தர மேலதிகப்பற்று மீது 2023.11.30 ஆந் திகதி வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூபா 12,927,328.76 (பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்தேழு ஆயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய் எழுபத்தாறு சதமும்) அத்துடன் ரூபா 10,000,000.00 (பத்து மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து நான்கு தசம் இரண்டு ஐந்து (24.25%) வீதத்தில் 2023.12.01 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 1 ஆவது கடன் மீது 2023.11.30 ஆந் திகதி வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூபா 5,132,014.81 (ஐந்து மில்லியன் நூற்று முப்பத்திரெண்டாயிரத்து பதினான்கு ரூபாய் எண்பத்தொரு சதமும்) அத்துடன் ரூபா 3,327,881.79 (மூன்று மில்லியன் முந்நூற்று இருபத்தேழு ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொரு ரூபாய் எழுபத்தொன்பது சதம்) மீது ஆண்டுக்கு இருபத்துமூன்று தசம் இரண்டு ஐந்து (23.25%) வீதத்தில் 2023.12.01 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 2 ஆவது கடன் மீது 2023.11.30 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூபா 561,218.68 (ஐந்நூற்று அறுபத்தோராயிரத்து இருநூற்றுப்பதினெட்டு ரூபாய் அறுபத்தெட்டு சதமும்)

அத்துடன் ரூபா 498,316.88 (நானூற்று தொண்ணூற்றெட்டு ஆயிரத்து முந்நூற்றுப்பதினாறு ரூபாய் எண்பத்தெட்டு சதம்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்தில் 2023.11.30 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் 3 ஆவது கடன் மீது 2023.11.30 ஆந் திகதி வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூபா 4,182,519.13 (நான்கு மில்லியன் நூற்று எண்பத்திரெண்டாயிரத்து ஐந்நூற்றுப் பத்தொன்பது ரூபாய் பதின்மூன்று சதமும்) அத்துடன் ரூபா 3,604,584.79 (மூன்று மில்லியன் அறுநூற்று நான்காயிரத்து ஐந்நூற்று எண்பத்து நான்கு ரூபாய் எழுபத்தொன்பது சதம்) மீது ஆண்டுக்கு ஆறு தசம் ஒன்பது மூன்று (6.93%) வீதத்தில் 2023.12.01 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்கூறிய 2013.12.06 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 7144, 2017.06.09 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 3350 ஆகியவற்றின் பேரில் நிரந்தர மேலதிகப்பற்று மீது ரூபா 12,927,328.76 (பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்தேழு ஆயிரத்து முந்நூற்று இருபத்தெட்டு ரூபாய் எழுபத்தாறு சதமும்) 1 ஆவது கடன் மீது ரூபா 5,132,014.81 (ஐந்து மில்லியன் நூற்று முப்பத்திரெண்டாயிரத்து பதினான்கு ரூபாய் எண்பத்தொரு சதமும்) 2 ஆவது கடன் மீது ரூபா 561,218.68 (ஐந்நூற்று அறுபத்தோராயிரத்து இருநூற்றுப்பதினெட்டு ரூபாய் அறுபத்தெட்டு சதமும்) 3 ஆவது கடன் மீது ரூபா 4,182,519.13 (நான்கு மில்லியன் நூற்று எண்பத்திரெண்டாயிரத்து ஐந்நூற்று பத்தொன்பது ரூபாய் பதின்மூன்று சதமும்) அத்துடன் 2023.12.01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேரந்த திருவாளர்கள் T&H ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். டீ. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21 இற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நகர அலுவலகக் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கொழும்பு பதிவுப் பிரிவில் சியனே கோரளை அதிகாரிப்பற்றுவில் கம்பஹா பிரதேச செயலகப் பிரிவில் (எனினும் மிகவும் சரியானது களனிய பிரதேச செயலகப் பிரிவு) களனிய பிரதேச சபை (தலுகம உப அலுவலகம்) எல்லைகளுள் ஹுனுபிட்டிய 256 B இலக்க கிராம சேவகர் பிரிவில் (எனினும் மிகவும் சரியானது வெலேகொட 256 B) ஹுனுபிட்டியவில் அமைந்த "கமத்தகொடெல்ல" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹக் ஆர். சமரசிங்ஹ தயாரித்த 2007, ஒற்றோபர் 21 மற்றும் 23 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 5344 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 1, வடக்கு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் சீ. டி. எஸ். த குணதிலக்க தயாரித்த வரைபடம் இல. 2468 இல் காணித்துண்டம் 1 உம்; கிழக்கு: முன்னர் ஏ. ஜே. சீ. பெரேராவின் காணியும்; தெற்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டீ. பீலிக்ஸ் பெரேரா தயாரித்த வரைபடம் இல. 1343 இல் காணித்துண்டு 2 மற்றும் காணித்துண்டு 1C உம்; மேற்கு: காணித்துண்டு 2 மற்றும் பாதையும் (வரைபடம் இல. 991 இல் காணித்துண்டு 9) உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 5344 இன் பிரகாரம் பத்து தசம் ஐந்து ஆறு பேர்ச் (00ஏ. 00று. 10.56பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மஹர காணிப்பதிவகத்தில் G 20/110 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஹுனுபிட்டியவில் அமைந்த "கமத்தகொடெல்ல" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹக் ஆர். சமரசிங்ஹ தயாரித்த 2007, ஒற்றோபர் 21 மற்றும் 23 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 5344 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 2 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 2, வடக்கு: காணித்துண்டு 1 உம்; கிழக்கு: காணித்துண்டு 1 உம்; தெற்கு: உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டீ. பீலிக்ஸ் பெரேரா தயாரித்த வரைபடம் இல. 1343 இல் காணித்துண்டு 1C உம்; மேற்கு: பாதையும் (வரைபடம் இல. 991 இல் காணித்துண்டு 9) உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 5344 இன் பிரகாரம் எட்டு தசம் எட்டு இரண்டு பேர்ச் (00ஏ. 00று. 8.82பே) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மரங்கள் பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி மஹர காணிப்பதிவகத்தில் G 20/111 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. டீ. எஸ். ஆர். பெரேரா தயாரித்த வரைபடம் இல. 991 இல் காணித்துண்டு 9 (பாதையொன்றுக்கான ஒதுக்கம்) மீதான ஏனையோருக்கு உரியதைப் போன்ற வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திருமதி ஆர். டீ. டீ. ரணசிங்ஹ,
பிரதான முகாமையாளர்,

இலங்கை வங்கி,
நகர அலுவலகக் கிளை.

07-729

## கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ

1990 ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியால் வழங்கப்பட்ட கடன்களை மீட்பதற்கான (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்படும் மேல்முறையீடுகள்.

கிளை : பத்தேகம கிளை
கடன் கணக்கு இலக்கம் : 2875662

### பதிரகே பாத்வெயா

2024, பெப்புருவரி 21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபை ஒருமனதாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

எல்பிட்டிய பிரபலமான நோட்டரி என். ஹல்பந்தெனிய அவர்களினால் 2019, மாச்சு 15 ஆந் திகதி சான்றளிக்கப்பட்ட இலக்கம் 2610 மற்றும் 2019, யூலை 08 ஆந் திகதி சான்றளிக்கப்பட்ட இலக்கம் 2687 கொண்ட அடமான பத்திரத்தின் மூலம் இங்கு கீழே உள்ள முதலாவது ஆவணங்களில் (மற்றும்/ அல்லது இதற்குப்பிறகு குறிப்பிட்டுள்ள அடமான பத்திரத்தின் ஆவணங்களில்) விரிவாக விவரிக்கப்பட்டுள்ள நிலம் மற்றும் வளாகம் அடகு வைத்து அடக்கி வைக்கப்பட்டுள்ள பத்தேகம, சந்தரவல, வதுரப பாதையில் இலக்கம் 184 கொண்ட இடத்தில் துவே பதிரகே கித்சிரி குமார மற்றும் ஹதபான்கொட முதலிகே தோன நிரோஷா தில்ருக்ஷி ஹதபான்கொட கடனாளியாக மற்றும் மேலே கூறப்பட்டுள்ள வசதிகள் மறுபடியும் செலுத்துவதற்காக அடமானமாக கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ பெயருக்கு எழுதப்பட்ட அடமான பத்திர இலக்கம் 2610 மற்றும் இலக்கம் 2687 மூலம் செலுத்த வேண்டிய தொகை செலுத்துவது அதன் துவே பதிரகே கித்சிரி குமார மற்றும் ஹதபான்கொட முதலிகே தோன நிரோஷா தில்ருக்ஷி ஹதபான்கொட கைவிடப்பட்டுள்ளதால்.

எல்பிட்டிய பிரதான நோட்டரி என். ஹல்பந்தெனிய அவர்களினால் 2020, செத்தெம்பர் 24 ஆந் திகதி சான்றளிக்கப்பட்ட இலக்கம் 2971 கொண்ட அடமான பத்திரத்தின் மூலம் கீழே உள்ள இரண்டாவது ஆவணங்களில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள நிலம் மற்றும் வளாகத்தை அடகு வைத்து அடக்கி வைக்கப்பட்டுள்ள அதில் "பதிரகே பாத்வெயா" துவே பதிரகே கித்சிரி குமார மற்றும் ஹதபான்கொட முதலிகே தோன நிரோஷா தில்ருக்ஷி ஹதபான்கொட கடனாளியாக மற்றும் மேலே குறிப்பிட்ட வசதிகளை மறுபடியும் செலுத்துவதற்காக அடமானமாக கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ பெயருக்கு எழுதப்பட்ட அடமான பத்திர இலக்கம் 2971 மூலம் செலுத்த வேண்டிய தொகை செலுத்துவது அதன் துவே பதிரகே கித்சிரி குமார மற்றும் ஹதபான்கொட முதலிகே தோன நிரோஷா தில்ருக்ஷி ஹதபான்கொட கைவிடப்பட்டுள்ளதால் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட கடன் வசதி எண் 2875662 சம்பந்தமாக அதன் அடமான பத்திரத்தின் கீழ், ஏனைய காரணத்துடன் ரூபாய் தொண்ணூற்று இரண்டு மில்லியன் நானூற்று எண்பத்தேழாயிரத்து இருநூற்று இருபது ரூபா முப்பத்தொரு சதம் (ரூபா 92,487,220.31) முழுத் தொகை 2024, சனவரி 09 ஆந் திகதி வரை அசல் மற்றும் வட்டி மூலம் கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ தற்போது செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டியிருப்பதாயின் அதில் ரூபாய் தொண்ணூற்று இரண்டு மில்லியன் நானூற்று எண்பத்தேழாயிரத்து இருநூற்று இருபது ரூபா முப்பத்தொரு சதம் (ரூபா 92,487,220.31) தொகையை மீட்பதற்காக 2024, சனவரி 10 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரையிலான காலத்திற்கு மறுசீரமைக்கப்பட்ட கடன் இலக்கம் 2875662 சம்பந்தமாக நிலுவையில் உள்ள அசல் தொகையின் அளவாக ரூபா 77,499,414.46 தொகை மூலம் வருடத்திற்கு 11% வீதம் மேலதிக வட்டியுடன் விளம்பர நடவடிக்கைக்காக செலவிடப்படும் செலவு மற்றும் வேறு தொகையுடன் இதுவரை பெறப்பட்ட ஏதாவது தொகை இருப்பின் அதை குறைத்து அதன் இலக்கம் 2610, 2687 மற்றும் 2971 கொண்ட அடமான பத்திரத்தின் மூலம் கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ அடமானம் வைக்கப்பட்டுள்ள அடமானங்கள் கீழே உள்ள முதலாவது மற்றும் இரண்டாவது அட்டவணையில் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளதோடு நிலம் மற்றும் வளாகம் கொழும்பு 08, பொரள்ள, பெலென்கஸ்துடுவ பாதை, இலக்கம் 109/21 கொண்ட இடத்தில் சிறப்பு அங்கீகாரம் பெற்ற ஏலதாரர் ஆகிய அரவ்வாவல சுசிலா குமாரி அவர்கள் மூலம் பொது ஏலத்தில் விற்கப்பட வேண்டுமென்று 1990 இல. 04 இல் வங்கியால் வழங்கப்பட்ட கடன்களை மீட்பதற்காக (சிறப்பு நடைமுறைகள்) சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கொமர்ஷல் பேங்க் ஆஃப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் திர்மானிக்கப்படும்.

### மேலே குறிப்பிட்டுள்ள முதலாவது அட்டவணை (ஆவணம்)

தெற்கு மாகாணத்தில், காலி மாவட்டத்தில், தெற்கு ககொட பத்துவே, பத்தேகம பிரதேச சபை எல்லைக்குள் பத்தேகம பிரதேச செயலக பிரிவு சந்தரவல, 220B கிராம அதிகாரி பிரிவுக்குள் கனேகம கிழக்கில் அமைந்துள்ள "ஹம்மெலியவகுரு மற்றும் ஒஹோபதலியத்த" என்ற காணிக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் டப்ளிவ். ஜீ. டீ. யூ. கருணாரத்ன அவர்களினால் 2012, சனவரி 21 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 12A/2012 கொண்ட பிபுரே பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் A என குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதிக்கு எல்லையாக, வடக்கு: அந்த காணி பகுதி மற்றும் ஒஹோபதலியத்தயில் லொட் 1B மூலமாகவும்; கிழக்கு: பிரதான பாதை மூலமாகவும்; தெற்கு: லொட் 3 மூலமாகவும் மற்றும் மேற்கு: அங்குலம் மற்றும் கடுஅதன ஓவிட மூலமாகவும் எல்லைக்குட்பட்ட பிபுரின் படி றூட் இரண்டு பேர்ச் இரண்டு தசம் நான்கு ஒன்று (00ஏ. 02றூ. 2.41பே) பெரிய நிலத்துடன் கூடிய கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் கூடிய இது காலி நிலப் பதிவு அலுவலகம் வெலும்/ பத்திரம் N 172/51 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### மேலே குறிப்பிட்டுள்ள இரண்டாவது அட்டவணை (ஆவணம்)

தெற்கு மாகாணத்தில், காலி மாவட்டத்தில், தெற்கு ககொட பத்துவே, பத்தேகம பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் சந்தரவல, 220B கிராம அதிகாரி பிரிவுக்குள் கனேகம கிழக்கில் அமைந்துள்ள "ஒஹோபதலியத்த" என்ற காணிக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் எம். சீ. விஜேவிக்ரம அவர்களினால் 2020, யூலை 09 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 4832 கொண்ட பிபுரே பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் X என குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதிக்கு எல்லையாக, வடக்கு: அந்த காணி பகுதி மூலமாகவும்; கிழக்கு: அந்த காணி பகுதி மற்றும் பொபுகஹ வகுர மூலமாகவும்; தெற்கு: இந்த காணி பகுதி மூலமாகவும் மற்றும் மேற்கு: வதுரப இல் இருந்து பத்தேகம வரை பிரதான பாதை வழியாக எல்லைக்குட்பட்ட அதன் இலக்கம் 4832 கொண்ட பிபுரின் படி பேர்ச் இருபத்தி நான்கு தசம் ஐந்து (00ஏ. 00றூ. 24.5பே) பெரிய நிலத்துடன் கூடிய கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அங்குள்ள அனைத்தும்.

### மேற்கண்ட நிலம் பின்வரும் நிலங்களின் ஒருங்கிணைப்பாகும்

1. தெற்கு மாகாணத்தில், காலி மாவட்டத்தில், தெற்கு ககொட பத்துவே, பத்தேகம பிரதேச செயலக பிரிவு மற்றும் பத்தேகம பிரதேச சபை எல்லைக்குள் சந்தரவல, 220B கிராம அதிகாரி பிரிவுக்குள் கனேகம கிழக்கில் அமைந்துள்ள "ஒஹோபதலியத்த" (ஈதனதகஹலியத்த இல் லொட் 3 இல் மற்றும் ஒஹோபதலியத்த லொட் 02 இல் லொட் 03 இல் மற்றும் 04 இல் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் உபபெதும) என்ற காணிக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் டப்ளிவ். ஜீ. டீ. யூ. கருணாரத்ன அவர்களினால் 2000, யூலை 31 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இல. 5862 கொண்ட பிபுரே பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் B என குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதிக்கு எல்லையாக, வடக்கு: அந்த காணி பகுதி (ஒஹோபதலியத்த பகுதி) மூலமாகவும்; கிழக்கு: அந்த காணி பகுதி மற்றும் பொபுகஹ வகுர என்ற போகஹலியத்த மூலமாகவும்; தெற்கு: காலி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண் P8381 இல் தாக்கல் செய்யப்பட்ட எண் 1682P கொண்ட பிபுரே லொட் 2 என்ற ஈதனகஹலியத்தயில் பகுதி மூலமாகவும் மற்றும் மேற்கு: வதுரபயிலிருந்து சந்தரவல வரை பிரதான பாதை மூலமாகவும் எல்லைக்குட்பட்ட அதன் இலக்கம் 5862 பிபுரின் படி பேர்ச் பதினெட்டு தசம் எட்டு (00ஏ. 00றூ. 18.8பே) பெரிய நிலத்துடன் கூடிய கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் கூடிய இது காலி நிலப் பதிவு அலுவலகம் வெலும்/ பத்திரம் N 192/115 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. தெற்கு மாகாணத்தில், காலி மாவட்டத்தில், தெற்கு ககொட பத்துவே, பத்தேகம பிரதேச செயலக பிரிவு மற்றும் பத்தேகம பிரதேச சபை எல்லைக்குள் சந்தரவல, 220B கிராம அதிகாரி பிரிவுக்குள் கனேகம கிழக்கில் அமைந்துள்ள "ஒஹோபதலியத்த" என்ற காணிக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் எச். எல். ஆர். ஜயசுந்தர அவர்களினால் 2012, பெப்புருவரி 28 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 2795A கொண்ட பிபுரே பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் 5A என குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதிக்கு எல்லையாக, வடக்கு: அசல் நிலத்தில் லொட் 06 மூலமாகவும்; கிழக்கு: லொட் 5 இல் மீதமுள்ள பகுதி மூலமாகவும்; தெற்கு: அசல் நிலத்தில் லொட் 3 மூலமாகவும் மற்றும் மேற்கு: லொட் 3 மூலமாகவும் எல்லைக்குட்பட்ட அதன் இலக்கம் 2795A கொண்ட பிபுரின் படி பேர்ச் ஒன்று தசம் ஐந்து (00ஏ. 00றூ. 1.5பே) பெரிய நிலத்துடன் கூடிய கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் கூடிய இது காலி நிலப் பதிவு அலுவலகம் வெலும்/ பத்திரம் N 192/116 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. தெற்கு மாகாணத்தில், காலி மாவட்டத்தில், தெற்கு ககொட பத்துவே, பத்தேகம பிரதேச செயலக பிரிவு மற்றும் பத்தேகம பிரதேச சபை எல்லைக்குள் சந்தரவல, 220B கிராம அதிகாரி பிரிவுக்குள் கனேகம அமைந்துள்ள "ஒருங்கிணைக்கப்பட்ட ஒஹோபதலியத்தயில் லொட் 2 இல் லொட் 4, ஒஹோபதலியத்தயில் லொட் 2 இல் லொட் 3, ஒஹோபதலியத்தயில் லொட் 2 இல் லொட் 2, ஈதனதகஹலியத்தயில்லொட்3மற்றும்ஒஹோபதலியத்தயின் பகுதி" என்ற காணிக்கு அங்கீகரிக்கப்பட்ட சர்வேயர் டப்ளிவ். ஜி. டீ. யூ. கருணாரத்ன அவர்களினால் 2000, யூலை 17 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 5812 கொண்ட பிபுரே பிரித்து ஒதுக்கப்பட்ட லொட் A இல் மீதி பகுதி மூலமாக குறிப்பிடப்பட்டுள்ள நிலப் பகுதிக்கு எல்லையாக, வடக்கு: சிமெந்தி சீமெந்து கய்ருவ மற்றும் அந்த நிலப் பகுதி மூலமாகவும்; கிழக்கு: பொபுகஹவகுர மற்றும் இவுர மூலமாகவும்; தெற்கு: அந்த நிலத்தின் மூலமாகவும் மற்றும் மேற்கு: வதுரபையிலிருந்து சந்தரவல வரை பிரதான பாதை மூலமாகவும் எல்லைக்குட்பட்ட அதன் இலக்கம் 5812 கொண்ட பிபுரின் படி பேர்ச் இருபத்தி மூன்று (00 ஏ. 00றூ. 23பே) பெரிய நிலத்துடன் கூடிய கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அங்குள்ள அனைத்துடனும் கூடிய இது காலி நிலப் பதிவு அலுவலகம் வெலும்/ பத்திரம் H199/70 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆர். ஏ. பீ. ராஜபக்ஸ,
நிறுவன செயலாளர்.

2024.02.21

07-734

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.